***கவனிக்க.*** *- 16.02.2018 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2060 - 2018 පෙබරවාරි මස 23 වැනි සිකුරාදා - 2018.02.23

*2060 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 326 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2018, மாச்சு மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மாச்சு மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## வடமேல் மாகாண சபை

*வடமேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க வடமேல் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம் பற்றிய சாசனம்*

இங்கு கீழ் பிரசுரிக்கப்படும் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் ................. ஆம் இலக்க வடமேல் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களம் பற்றிய சாசனம் இத் திகதி தொடக்கம் முப்பது நாட்கள் கடந்ததன் பின்பு வடமேல் மாகாணத்தின் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கபடுவது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன். இது சம்பந்தமாக எவர் ஒருவருக்கு இச் சாசனத்தில் உள்ளடங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றி சமர்ப்பிப்பதற்கு ஏதாவதொரு விடயம் இருப்பின் அதனை அத் திகதிக்கு முன் எனக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

லக்ஷ்மன் வேண்டருவ,
அமைச்சர்,
சுகாதார, தேசிய வைத்திய, சமூக நலன்புரி,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள்,
மகளிர் அலுவல்கள் மற்றும் சபை நடவடிக்கை அமைச்சு,
வடமேல் மாகாணம்.

வடமேல் மாகாண சுகாதார, தேசிய வைத்திய,
சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும்
சிறுவர் பாதுகாப்பு சேவைகள், மகளிர் அலுவல்கள்
மற்றும் சபை நடவடிக்கை அமைச்சு,
3 ஆம் மாடி,
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

**20.... ஆம் ஆண்டின் ........ ஆம் இலக்க வடமேல் மாகாண நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் நியதிச்சட்டம்**

நீண்ட பெயர்.

வடமேல் மாகாணத்தில் அநாதைகளான, கைவிடப்பட்ட அநாதரவான, துஷ்பிரயோகத்துக்கு ஆளான சிறுவர்களுக்குப் பொறுப்பாகவும் பாதுகாப்பினை வழங்கியும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தும் சிறுவர்களுக்குரிய சகல நலனோம்பல் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கும் நீதிமன்றத்தின் மூலம் ஆற்றுப்படுத்தப்படும் சட்டத்துடன் தொடர்புபட்ட சிறுவர்கள் மற்றும் வயது வந்த குற்றவாளிகளின் புனர்வாழ்வளிப்புக்குரிய சேவைகளை நடாத்திச் செல்வதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டும் இவற்றுடன் தொடர்புள்ள இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச்சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இந்த நியதிச்சட்டம் 20.... ஆம் ஆண்டின் ........ ஆம் இலக்க வடமேல் மாகாண நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் நியதிச்சட்டம் என அழைக்கப்படுதோடு வடமேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நிதிச்சட்டத்தின் நோக்கங்கள்.

2. இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறாகும்:

(1) வடமேல் மாகாண நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தைத் தாபித்தல்

(2) வடமேல் மாகாண நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு நிதியத்தை தாபித்து நடாத்திச் செல்தல்

(3) வடமேல் மாகாணத்தில் குடியிருக்கும் அத்துடன் வடமேல் மாகாணத்தில் அநாதைகளான கைவிடப்பட்ட அல்லது அநாதரவான அத்துடன் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் அத்துடன்

துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதற்கு இடமுள்ள சிறுவர்களின் பொறுப்பு, பாதுகாப்பு மற்றும் அவர்களுடைய உரிமைகளைப், பாதுகாத்தல்.

(4) சட்டத்துடன் தொடர்புபட்ட கட்டுப்பாட்டை விஞ்சிய சிறுவர்கள் மற்றும் நீதிமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்படும் குற்றவாளிகள் ஆகியோர்களை புனர்வாழ்வளிப்பதற்கும் நன்னடத்தை காவலில் வைப்பதற்கும் உரியதான பணிகளைச் செய்தல்.

(5) அநாதைகளான, கைவிடப்பட்ட, அநாதரவான, துஷ்பிரயோகத்துக்கு ஆளான சட்டத்துடன் தொடர்புபட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புக்கு உரிய தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் பகற்பொழுதில் பாதுகாப்பினை ஏற்பாடு செய்யும் பொருட்டு தன்னார்வ அடிப்படையில் அல்லது வர்த்தக நோக்கில் நடாத்திச் செல்லப்படும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களையும் நிறுவனங்களையும் பதிவு செய்தல். மேற்பார்வை செய்தல், ஒழுங்குறுத்துதல் முறைப்படுத்துதல் மற்றும் வசதிகளை ஏற்பாடு செய்தல்.

(6) வடமேல் மாகாணத்தில் குடியிருக்கும் சிறுவர்கள் அனைவரினதும் உரிமைகளை பாதுகாத்தல், துஷ்பிரயோகத்திற்கு ஆளாவதை தடுத்தல் சம்பந்தமாக எடுக்கக்கூடிய அத்துடன் எடுக்கப்பட வேண்டிய அத்தகைய சகல நடவடிக்கைகளையும் எடுத்தல்.

(7) வடமேல் மாகாணத்தினுள் சிறுவர்கள் சார்பில் சேவைகளை வழங்கும் சகல நிறுவனங்களிலும் பேணப்பட வேண்டிய தரங்களை வகுத்தமைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குறுத்துதல்

(8) இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு கிராம அலுவலர் பிரிவுகள் அனைத்திலும் சிறுவர் சங்கமொன்றை ஆரம்பித்து பதிவு செய்து நடாத்திச் செல்லுதல்.

பாகம் I

## நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தைத் தாபித்தல், அதன் கட்டமைப்பு, தத்துவங்கள் மற்றும் பொறுப்புகள்

3. இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வடமேல் மாகாண மாகாண நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் என அழைக்கப்படும் (இதனகத்துப் பின்னர் நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் என குறிப்பீடு செய்யப்படும். திணைக்களமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

வடமேல் மாகாண நன்னடத்தை பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தைத் தாபித்தல் .

4. (1) இதனகத்துப் பின்னர் நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் என அழைக்கப்படும் இலங்கை நிருவாக சேவையின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோத்தர் ஒருவர் இந்த நியதிச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படும் திணைக்களத்தின் தலைவருமாதல் வேண்டும்.

வடமேல் மாகாண நன்னடத்தை பாதுகாவல் சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரும் பதவியணியும்.

(2) மாகாண ஆணையாளருக்கு ஒத்தாசை நல்கும் பொருட்டு திணைக்கள ரீதியிலான உத்தியோகத்தர்களில் உதவி ஆணையாளர் ஒருவர் புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய இரு மாவட்டங்கள் சார்பில் சிரேட்ட நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர்கள் இருவர், இந்த நியதிச்சட்டத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்படும் சகல உப அலுவலகங்களுக் காகவும் நிலையப் பொறுப்பு நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர்கள் இந்த நன்னடத்தை பாதுகாவல் அலுவலக அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவுகளை தழுவும் விதத்தில் நன்னடத்தை பாதுகாவல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையின் தேவையின் மீது ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்களைக் கொண்ட பதவியணியொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இந்த நியதிச் சட்டத்தில் ஆணையாளருக்கு கையளிக்கப்படும் தத்துவங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் திணைக்களம் சார்ந்த உதவி ஆணையாளர், சிரேட்ட நன்னடத்தைப் பாதுகாவல்

உத்தியோகத்தர், நிலையப் பொறுப்பு நன்னடத்தை, பாதுகாவல் உத்தியோகத்தர்கள், நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர்கள், திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு ஆணையாளரினால் அவருடைய தத்துவங்களைக் கையளிக்கலாம்.

(4) இந்த நியதிச்சட்ட நோக்கங்களுக்காக நியமிக்கப்படும் சகல உத்தியோகர்தர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் வரைவிலக்கணத்துக்கு அமைவாக அரசாங்க உத்தியோகத்தர்களாக கருதப்படுதலும் வேண்டும்.

திணைக்களத்தின் பணிகளும் கடமைகளும்.

5. இந்த திணைக்களத்தின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்.

(1) அநாதைகளான, கைவிடப்பட்ட, அநாதரவான துஷ்பிரயோகத்துக்கு ஆளான சிறுவர்களுக்குப் பாதுகாப்பினை வழங்கும் நிறுவனங்களைப் பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்குறுத்துதல் உட்பட அத்தகைய நிறுவனங்களுக்கு வசதிகளை ஏற்பாடு செய்தல்.

(2) வடமேல் மாகாணத்தினுள் அநாதைகளான, கைவிடப்பட்ட அநாதரவான துஷ்பிரயோகத்துக்கு ஆளான சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி தங்குமிட வசதிகளை வழங்குதல், கல்வி போஷாக்கு உட்பட தொழிற்பயிற்சி வழங்குதல்.

(3) (i) இந்த பிரிவின் (1) ஆம் உபபிரிவில் விபரிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் சார்பில் வயதுக்கு அமைவாகவும் வளர்ச்சிக்குத் தேவையானதுமான போஷாக்கு மிக்க உணவுகளை வழங்குவது தொடர்பில் மேற்பார்வை செய்தல்.

(ii) இந்தப் பிரிவின் (2) ஆம் உபபிரிவில் விபரிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் சார்பில் வயதுக்கு ஏற்ற முறையான மற்றும் முறையற்ற கல்வி வசதிகளையும் தொழிற்பயிற்சிகளையும் வழங்குவது தொடர்பில் மேற்பார்வை செய்தல்.

(iii) மேல் (1) ஆம் உபபிரிவில் விபரிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் உள சுகாதாரம் மற்றும் அபிவிருத்திக்குரிய வசதிகளை வழங்குவது தொடர்பில் மேற்பார்வை செய்தல்.

(iv) மேல் (1) ஆம் உபபிரிவில் விபரிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குவது தொடர்பில் மேற்பார்வை செய்தல்.

(v) மேல் (1) ஆம் உபபிரிவில் விபரிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் திறமை மற்றும் ஆக்கத்திறன், கலை மற்றும் விளையாட்டு திறமைகள் என்பவற்றின் அபிவிருத்திக்குரியதான வசதிகளை வழங்குவது தொடர்பில் மேற்பார்வை செய்தல்.

(vi) மேல் 3(1) ஆம் உபபிரிவில் விபரிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் மத, ஒழுக்க விழுமியங்கள் மற்றும் கலாசார விருத்திக்குரிய வசதிகளை வழங்குவது தொடர்பில் மேற்பார்வை செய்தல்.

(vii) தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்யும் போது ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் உள்ளடக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் உரிய ஆட்சேர்ப்புகளை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்

(4) பெற்றோர்கள், சட்டபூர்வ பாதுகாவலர்கள், சட்டபூர்வமற்ற பாதுகாவலர்கள் அல்லாத உறவினர்கள் அல்லது உறவினர்கள் அல்லாத ஆட்களினால் பொறுப்பேற்று செயலாற்றுவதற்கு எதிர்பார்க்கும் அத்துடன் தத்தெடுப்பதற்கு எதிர்பார்க்கும் ஆட்களுக்கு சிறுவர்களை ஒப்படைத்து சமூகமயப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(5) தாபரிப்பு பெற்றோர் முறையின் கீழ் சிறுவர்களுக்குப் பொருத்தமான தாபரிப்புப் பெற்றோர்களைப் பதிவு செய்தல், நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல்.

(6) இந்த நியதிச்சட்டத்தில் அல்லது பிற எந்தவொரு சட்டத்திலும் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சட்டத்தினுள் தொடர்புபட்ட சிறுவர்களினதும் கட்டுப்பாட்டை விஞ்சிய சிறுவர்களினதும் புனர்வாழ்வளிப்புக்கு திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலைகளை நடாத்திச் செல்லல்.

(7) பிற எந்தவொரு சட்டத்தின் ஊடாகவும் விதிக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டத்துடன் தொடர்புபட்ட சிறுவர்கள் உட்பட வயதுவந்த குற்றவாளிகள் சம்பந்தமாக நீதி மற்றங்களுக்கு உரிய அறிக்கைகளை வழங்கும் நன்னடத்தைப் பின்பொறுப்பு ................ பல்வேறுபட்ட மேற்பார்வை கட்டளைகளுக்குரிய கண்காணிப்புப் பணிகளை நடாத்திச் செல்தல்.

(8) வடமேல் மாகாணத்தினுள் வசிக்கும் பகற்பொழுதில் அவர்களுடைய பெற்றோர்களினால் பாதுகாப்பினை வழங்குவதற்கு முடியாதுள்ள ஆறு (06) மாதங்களிலிருந்து ஐந்து (05) வயது வரையிலான குழந்தைகளின் உடல், உள ரீதியில் பாதுகாப்பினை வழங்கக்கூடிய விதத்தில் நடாத்திச் செல்லப்படும் பராமரிப்பு நிலையங்களைப் பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துதல்.

(9) இந்த நியதிச் சட்டத்தின் 2 (5) ஆம் உபபிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ அமைப்புகளின் மூலம் நடாத்திச் செல்லப்படும் பகற்பொழுது பாராமரிப்பு நிலையங்கள் அல்லது நிறுவனங்களில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அல்லது குழந்தைகளின் உச்ச நலனின் பொருட்டு தேவைக்கேற்ப பராமரிப்பு உதவிகளை வழங்குதல் அத்தகைய நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் உட்பட அத்தகைய நிறுவனங்களின் பதவியணிக்குப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.

(10) சட்டத்துடன் தொடர்புபட்ட சிறுவர்களை தற்காலிகமாகத் தங்க வைப்பதற்கான பாதுகாப்பு இல்லங்களை நடாத்திச் செல்தலும்.

(11) 18 வயதுக்கு குறைந்த கர்ப்பிணிப் பிள்ளைகளுக்கும் 18 வயதுக்கு குறைந்த தாய்மார்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் பாதுகாப்பினை வழங்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நடாத்திச் செல்தலும்.

(12) அநாதைகளான, கைவிடப்பட்ட, அநாதரவான, துஷ்பிரயோகத்துக்கு ஆளான சிறுவர்களின் பொறுப்பு, பாதுகாப்பு, போஷாக்கு மற்றும் பராமரிப்பு என்பன கிடைக்கப் பெறாத பிற சட்மொன்றினால் நியதிச் சட்டமொன்றினால் தழுவப்படாத சிறுவர்களுக்கு போஷாக்கு மற்றும் கல்வி உதவிகளை வழங்குதல்.

(13) சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களைக் குறைத்தல் என்பன பொருட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தலும் நடாத்திச் செல்தலும்.

(14) பாதுகாப்பாக வசிப்பதற்கு வீடொன்றில்லாத காரணத்தினால் சிறுவர் இல்லங்களுக்கு அனுமதிக்கப்பட்ட சிறுவர்களை மீண்டும் குடும்பங்களில் சேர்ப்பதற்கு அல்லது அநாதரவான சிறுவர்களை சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்குச் செல்வதைத் தடுத்து அவர்களுடைய குடும்பத்திலேயே தங்க வைக்கும் நோக்கில் உதவிகளை வழங்குதல்.

(15) அநாதரவான பிள்ளைகள் சிறுவர் அபவிருத்தி நிலையங்களில் அனுமதிப்பதினை தடுப்பதற்கு சுயதொழில் பயிற்சிகளை வழங்குதலும் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்தலும்.

(16) 07 ஆம் பிரிவின் கீழுள்ள நிறுவனங்களின் பதவியணியையும் பௌதிக வளங்களையும் அபிவிருத்தி செய்தல்.

(17) வடமேல் மாகாணத்தில் சிறுவர்களுக்கான சகல தனியார் கல்வி நிறுவனங்கள், விடுதிகள், சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் மத வழிபாட்டுத் தலங்கள், சிறுவர்களுக்காக தாபிக்கப்பட்டுள்ள பிற நிறுவனங்கள், சிறுவர்களின் ஆகக்கூடிய நலனின் பொருட்டு நடாத்திச் செல்லப்படுவதை உறுதி செய்து கொள்வதற்கு உரியதான தரங்களை தயாரித்தலும் ஒழுங்குறுத்தலும்.

(18) நீதமன்றத்தினால் புனர்வாழ்வளிப்பதற்காக ஆற்றுப்படுத்திய சிறுவர்களின் அல்லது பொறுப்பு, பாதுகாப்பு இல்லாததன் காரணமாக சட்டத்துடன் தொடர்புபட்ட சிறுவர்கள் அல்லது வயது வந்தவர்கள் நலனோம்மல் பணிகள், பராமரிப்பு மற்றும் கல்விப் பணிகளுக்கான வசதிகளை ஏற்பாடு செய்தல்.

(19) தத்தெடுப்பு வழக்குகளின் போது வழக்கின் நம்பிக்கை பொறுப்பாளராக செயலாற்றி நீதிமன்றங்களுக்கு நிபாரிசுகளை சமர்ப்பித்தலும் சிறுவவர்களுக்குரிய பிற சிவில் நீதிமன்ற செயற்பாடுகளின் போது நிதிமன்றத்தினால் கோரப்படும் அறிக்கைகளை வழங்குதலும்

(20) வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் கல்வி நிறுவனமொன்றில் சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது வன்முறை அல்லது சிறுவர் உரிமைகள் உரிய வகையில் பாதுகாக்கப்படவில்லையென அறிக்கையிடப்படும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் பூரண விசாரணையொன்றை மேற்கொண்டு தேவையான சட்ட நடவடிக்கைகளுக்கு ஆட்படுத்துதல்

6. (1) இந்த நியதிச்சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான தகவல்கள், அறிக்கைகள் நன்டத்தை பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரினால் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் ஒருவரினால் ஏதேனும் நிறுவனமொன்றிடமிருந்து அல்லது ஆள் ஒருவரிடமிருந்து கோரப்பட்டால் அவர் அல்லது அந்த நிறுவனம் குறித்த தகவல்களை ஆணையாளருக்கு வழங்குதல்

(2) வடமேல் மாகாணத்தினுள் நடாத்திச் செல்லப்படும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் சிறுவர்களுக்கான கல்வி தங்குமிட வசதிகள் மற்றும் பல்வேறுபட்ட சேவைகளை வழங்கும் சகல நிறுவனங்களும் அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் எந்த நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இந்த சகல நிறுவனங்களுக்கும் நன்னடத்தை பாதுகாவல், சிறுவர் பராமிப்பு சேவைகள் ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்படும் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் முன் அறிவித்தலின்றி எந்த நேரத்திலும் நுழைவதற்கும் இந்த நியதிச் சட்டத்தின் பணிகளுக்காகவும் நோக்கத்திற்காகவும்.

(அ) ஏதேனும் பரிசோதனையொன்றை செய்வதற்கும்;

(ஆ) ஏதேனும் விசாரணையொன்றை செய்வதற்கும்;

(இ) ஏதேனும் புலனாய்வொன்றைச் செய்வதற்கும்;

(ஈ) ஏதேனும் அளவாய்வொன்றைச் செய்வதற்கும்;

(உ) இந்த நோக்கத்திற்குத் தேவையான ஆவணங்களை பரிசீலனை செய்வதற்கும் ஆவணங்களின் உண்மையான பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கும் அல்லது தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும்;

(ஊ) தேவையான ஆவணங்களை கட்டுக்காப்பில் எடுத்தல் உட்பட அத்தகைய நடவடிக்கையொன்றைச் செய்வதற்கும்;

அதிகாரம் உள்ளது.

பாகம் II

**சிறுவர்களுக்குரிய சேவைகளை வழங்கும் நிறுவனங்களைப் பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்குறுத்தல்**

திணைக்களத்தின் தத்துவங்கள்.

7. (1) இந்த நியதிச்சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக வடமேல் மாகாணத்தில் தன்னார்வ அடிப்படையில் நடாத்திச் செல்லப்படும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், தற்பொழுதிலான பராமரிப்பு நிலையங்கள் அல்லது அதற்குச் சமமான நோக்கத்தில் சிறுவர்கள் சார்பில் நடாத்திச் செல்லப்படும் அத்துடன் சேவைகளை வழங்கும் சகல நிறுவனங்களும் வடமேல் மாகாண நன்னடத்தை பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைகளத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்பொன்று அல்லது கிளையொன்று அத்தகைய அமைப்பொன்றின் நிதியளித்தலின் மீது நடாத்திச் செல்லப்படும் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்று அல்லது நிறுவனமொன்றாயின் இலங்கை அரசாங்கத்தின் சமூகசேவைகள் அமைச்சின் அரச சார்பற்ற அமைப்புகளை பதிவு செய்யும் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் வடமேல் மாகாண நன்னடத்தை பாதுகாவல் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தில் பதவி செய்யப்படுதல் வேண்டும். சிறுவர் அபிவிருத்தி நிலையங்களையும் நிறுவனங்களையும் பதிவு செய்ய வேண்டுமென.

(3) இந்த நியதிச் சட்டம் அமுலுக்கு வரும் திகதியன்றில் வடமேல் மாகாணத்தில் நடாத்திச் செல்லப்பட்ட மேல் 7(1) ஆம் 7(2) ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இல்லங்கள் ஒவ்வொன்றும் அல்லது நிறுவனம் ஒவ்வொன்றும் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) இந்த நியதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக வடமேல் மாகாணத்தினுள் ஏதேனும் அடிப்படையில் புதிதாக ஆரப்பிக்கப்படும் சிறுவர் அவிவிருத்தி நிலையங்கள், பகற்பொழுது பராமரிப்பு நிலையங்கள் உட்பட சிறுவர்கள் சார்பில் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் யாவும் அவ்வாறு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் வடமேல் மாகாண நன்னடத்தை பாதுகாவல் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தில் தற்காலிக பதிவினைப் பெற்றுக் கொள்தல் வேண்டும். தற்காலிகப் பதிவியினை பெற்றுக் கொள்ளல்.

(5) அவ்வாறு பதிவினை பெற்று ஆரம்பிக்கப்படும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் பகற்பொழுது பராமரிப்பு நிலையங்கள் உட்பட சிறுவர்கள் சார்பில் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் அவ்வாறு ஆரம்பிக்கப்பட்டு ஒரு (01) வருட காலப்பகுதிக்குள் அல்லது ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் ஒரு (01) வருட காலத்திற்கு குறைந்த காலப்பகுதியில் நிலையான பதிவினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். நிலையான பதிவினைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த தரங்களும் தேவைகளும் மேல் 7(4) ஆம் உப பிரிவின் கீழ் தற்காலிக பதவினைப் பெற்றுக் கொண்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் பகற்பொழுது பாரமரிப்பு நிலையங்கள் உட்பட சிறுவர்கள் சார்பில் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் இந்த நியதிச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட கட்டளைகளின் மூலம் விதிந்துரைக்கப்படும் உரிய தரங்களுக்கு அமைவாக செயலாற்றுகின்றனவென ஆணையாளர் திருப்தியுறும் பட்சத்தில் நிலையான பதிவினை வழங்குதல் வேண்டும்.

8. இந்த நியதிச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்வதற்கு தகைமையுடைய கட்டணங்கள் மூலம் விதிந்துரைக்கப்பட்டுள்ள தரங்களுக்கு அமைவாக செயலாற்றாத சிறுவர் அவிவிருத்தி நிலையமொன்று அல்லது பகற்பொழுது பராமரிப்பு நிலையமொன்று அல்லது வேறு சேவை வழங்கும் நிறுவனமொன்று பதிவு செய்வதற்கு தகைமையுடையவன் ஆகாது. சிறுவர் அபிவிருத்தி நிலையங்களையும் நிறுவனங்களையும் பதிவு செய்ய வேண்டுமென.

9. ஆணையாளர் இந்த நியதிச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்று அல்லது வேறு ஏதேனும் நிறுவனமொன்று பதிவு செய்யப்படுவதற்கு தமையைப் பெறாத சந்தர்ப்பமொன்றில் பதிவினை நிராகரித்தமை பற்றி ஆணையாளரினால் உரிய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். பதவியினை நிராகரித்தல்.

10. (1) இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக இயங்குகின்றதென அல்லது கட்டளைகள் மூலம் விதிந்துரைக்கப்பட்ட தரங்களுக்கு அமைவாக செயலாற்றவில்லையென ஆணையாளரானவர் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் அவருக்கு அத்தகைய சிறுவர் அவிருத்தி நிலையமொன்றின் அல்லது நிறுவனமொன்றின் பதிவினை இரத்துச் செய்யலாம். பதவியினை இரத்துச் செய்தல்.

(2) பதிவு இரத்துச் செய்யப்பட்டமை பற்றியும் அவ்வாறு செய்வதற்கு ஏதுவாய் அமைந்த காரணங்கள் பற்றியும் ஆணையாளரினால் உரிய சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) இந்த நியதிச்சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கு அமைவாக அல்லது 10(1) ஆம் உபபிரிவிற்கு அமைவாக ஆணையாளர் செயலாற்றும் போது 28 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளில் விதித்துரைக் கப்பட்டுள்ள உரிய தரங்களுக்கு அமைவாக செயலாற்றவில்லையென ஆணையாளர் கருதுமிடத்து

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் அல்லது நிறுவனத்தின் சேவைகளை பெற்றுக் கொள்ளும் சிறுவர்களை அப்புறப்படுத்தலாம்.

பதவியினை நிராகரித்தல் அல்லது இரத்துச் செய்தல் சம்பந்தமான மேன்முறையீட்டு அதிகாரம்.

11. இந்த நியதிச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பதிவினை நிராகரித்தமை பற்றிய அல்லது 10 ஆம் பிரிவின் கீழ் பதிவினை இரத்துச் செய்தமை பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் ஆணையாளரின் தீர்மானம் சம்பந்தமாக திருப்தியுறாத சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் அல்லது நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் அதற்கு எதிராக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

12. (1) இந்த நியதிச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீடொன்று கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக விசாரணையொன்றைச் செய்து தீர்மானமொன்றை வழங்குவதற்கு அமைச்சரினால் செயலாளருக்கு பணிப்பு விடுக்கலாம்.

(2) செயலாளரினால் இது சம்பந்தமாக முறையான விசாரணையொன்றை நடாத்தியதன் பின்னர் ஆணையாளரின் தீர்மானத்தை உறுதிப்படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்கு அல்லது நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

(3) மேன்முறையீடு கிடைக்கப்பெற்று மூன்று 03 மாத காலத்திற்குள் செயலாளரின் தீர்மானம் வழங்கப்பட வேண்டுமென்பதோடு அது இறுதியானதாதலும் வேண்டும்.

சிறுவர் அபி விருத்தி நிலையங்களை அல்லது நிறுவனங்களை மூடுதல்.

13. (1) இந்த நியதிச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பதிவு நிராகரிக்கப்பட்ட அல்லது 10(1) ஆம் உபபிரிவில் பதிவு இரத்துச் செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் அல்லது நிறுவனங்கள் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(2) ஆயினும் இந்த நியதிச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மேன்முறையீட்டு விசாரணையின் தீர்மானம் கிடைக்கும் வரை மூடுவதை தாமதப்படுத்தலாம்.

(3) இந்த நியதிச்சட்டத்தின் 12 (2) ஆம் உபபிரிவின் கீழ் மேன்முறையீட்டு விசாரணையில் ஆணையாளரின் தீர்மானம் உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த தீர்மானம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் உரிய சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை அல்லது நிறுவனத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிறுவனங்களை ஒழுங்குறுத்தல்.

14 (1) இந்த நியதிச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை அல்லது நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்கு செயலாற்றும் தன்னார்வ அமைப்புகள் யாவும் அதன் சிறுவர் அபிவிருத்தி நிலையம் அல்லது நிறுவனம் சம்பந்தமாக ஆணையாளருடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளுதல் வேண்டும். உடன்படிக்கையில் உள்ளடக்கப்படும் நிபந்தனைகள் கட்டளைகள் மூலம் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு காலத்துக்கு ஏற்ப அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விதித்துரைக்கப்பட வேண்டுமென அமைச்சர் அல்லது ஆணையாளர் கருதும் ஆலோசனைகள் அல்லது நியதிகள் அல்லது வழிகாட்டல்கள் சுற்றறிக்கை மூலமோ அல்லது கட்டளைகள் மூலமோ வழங்கப்படுதல் வேண்டும்.

(3) 14 (2) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்படும் ஆலோசனைகள் அல்லது நியதிகள் அல்லது வழிகாட்டல்கள் இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள சகல சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் அல்லது நிறுவனங்கள் பின்பற்றுகின்றனவென அல்லது இணங்கியொழுகின்றனவென அதன் முகாமைத்துவத்தினால் பொறுப்புச் சொல்லுதல் வேண்டும்.

பாகம் III

**வடமேல் மாகாண நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் நிதியம்**

15. இதனகத்துப் பின்னர் நிதியம் என அழைக்கப்படும் 'வடமேல் மாகாண நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் பராமரிப்பு சேவைகள் நிதியம்' தாபிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுதல் வேண்டும்.

16. (1) இந்த நிதியத்தின் கட்டமைப்பு பின்வருமாறாதல் வேண்டும்.

(அ) அரசாங்கத்தின் நிதி உதவியாக காலத்திற்கு காலம் வழங்கப்படும் நிதி ;

(ஆ) வடமேல் மாகாண சபையினால் இந்த நிதியத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்படும் நிதி ;

(இ) மாகாண சபைகள் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டு உதவியாக கிடைக்கப்பெறும் நிதி;

(ஈ) கண்காட்சிகள், லொத்தர் உட்பட பிற முறைகளில் பெற்றுக் கொள்ளப்படும் சகல நிதிகளும்;

(உ) எவரேனும் ஆள் ஒருவரின் அல்லது நிறுவனமொன்றின் அல்லது அமைப்பொன்றின் மூலம் நன்கொடைகளாக கிடைக்கப் பெறும் அத்தகைய சகல நிதிகளும் சொத்துக்களும்

(ஊ) நிதியத்தின் நிதிகளை முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கப் பெறும் வட்டி அல்லது இலாபம் அல்லது கிடைக்கக் கூடிய நிதி

(எ) நீதிமன்றத்தின் மூலம் கிடைக்கப்பெறும் நிதிகள்

(2) இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக கூறப்படும் செலவுகள் இந்த நிதியத்திற்கு செலவுப் பொறுப்பாதலும் வேண்டும்.

17. பின்வரும் நோக்கங்களுக்காக மாத்திரம் நிதியத்தின் நிதிகளை பயன்படுத்தலாம்.

(அ) அரசாங்க சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் அல்லது திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

(ஆ) அரசாங்கத்தின் அல்லது தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையம் பகற்பொழுது பராமரிப்பு நிலையம் அல்லது சிறுவர்களுக்கு சேவை வழங்கும் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வேறு நிறுவனங்களின் பதவியணியினரின் நலனோம்பல் சேவைகளை விருத்தி செய்தல்

(இ) சிறுவர் தொடர்புற்ற கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள்

(ஈ) சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் செயலாற்றும் பணியாட்டொகுதியினருக்கு பயிற்சியளித்தல்.

(உ) திணைக்கள சேவைகளை பொதுமக்களுக்கு சென்றடைவதற்கு உரியதான விளம்பர பொறிமுறையைப் பலப்படுத்துதல்

(ஊ) பதிவு செய்யப்பட்ட பகற்பொழுது பராமரிப்பு நிலையங்களில் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு, முன்சிறுவர் பராய அபிவிருத்திக்கு உரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

(எ) சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களைக் குறைத்தல், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு குழந்தைகள் உள்வாங்கப்படுதலை குறைத்தல் தொடர்பிலும் குழந்தைகளின் ஆகக்கூடிய நலனின் பொருட்டு செயற்பட வேண்டிய விதம் பற்றியும் அச்சிடப்பட்ட வெளியீடுகளை, நூல்களை சஞ்சிகைகளை வெளியிடுதலும் விவரண திரைப்படங்களைத் தயாரித்தலும்

(ஏ) சிறுவர் அபவிருத்தி நிலையங்களுக்கு குழந்தைகளை உள்வாங்குவதற்கு செய்யப்படும் கோரிக்கைகளுக்கு மாற்று வேலைத் திட்டங்கள், கருத்திட்டங்கள் உட்பட மீண்டும் குடுபங்களுடன் இணைத்தல் என்பவற்றுக்குரிய விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

(ஐ) வறுமையினால் கல்வி இல்லாமற் போகும் குழந்தைகளுக்கு கல்வியை வழங்குதல்

(ஓ) நிறுவனத்தில் அல்லது சொந்த வீட்டில் வசிக்கும் குழந்தைகளுக்கு திணைக்கள நிதி ஏற்பாடுகளின் மூலம் தழுவப்படக் கூடிய நோக்கங்கள்

18. (1) இந்த நிதியத்தின் செயற்பாட்டுக்காக அரசாங்க வங்கியொன்றில் நிதியத்தின் பெயரில் கணக்கொன்று நடாத்திச் செல்லப்படுதல் வேண்டும் நிதியத்தின் சார்பில் கிடைக்கப் பெறும் சகல பணத் தொகைகளும் நிதியத்தின் இந்த கணக்குக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

19. நிதியத்தின் பொறுப்பானது வடமேல் மாகாண நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரினால் வகிக்கப்படுதல் வேண்டும்.

20. நிதியத்தின் கணக்குகளுக்கான நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

21. அரசாங்க நிறுவனங்களில் கணக்குகளை கணக்காய்வு செய்வது சம்பந்தமாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளும் வடமேல் மாகாண சபையின் நிதிப் பிரமாணமும் இந்த நிதியத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வது சம்பந்தமாக ஏற்புடையதாதல் வேண்டும்.

22. அமைச்சரினால் பஞ்சாங்க ஆண்டு முடிவடைந்து ஆறு (06) மாத காலத்திற்குள் குறித்த பஞ்சாங்க ஆண்டுக்கான நிதியத்தின் கணக்கின் நிருவாக அறிக்கையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளும் உள்ளடக்கப்பட்ட பிரதியையும் இந்த கணக்குகள் தொடர்பிலுள்ள கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையின் பிரதியையும் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

23 (1) இந்த நிதியத்தை நிருவகிக்கும் பொருட்டு முகாமைத்துவ சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் முகாமைத்துவ சபைக்கு பின்வரும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(அ) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்;
(ஆ) நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர்;
(இ) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் கணக்காளர்;
(ஈ) திணைக்களத்தின் உதவி ஆணையாளர் அல்லது சேவை புரிந்து கொண்டிருக்கும் சிரேட்ட நன்னடத்தை பாதுகாவல் உத்தியோகத்தர் ஒருவர்;
(உ) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் வடமேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நடாத்திச் செல்லும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் அல்லது நிறுவனங்களின் முகாமைத்துவத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள்

(2) அமைச்சின் செயலாளர் இந்த முகாமைத்துவ சபையின் தலைவராதல் வேண்டுமென்பதோடு மாகாண ஆணையாளர் முகாமைத்துவ சபையின் செயலாளராதலும் வேண்டும்.

(3) முகாமைத்துவ சபைக்கு இந்த நியதிச்சட்டத்தின் 23 (1) (உ) ஆம் உப பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலமானது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(4) உத்தியோகபூர்வ அடிப்படையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலமானது குறித்த பதவி முடிவுக்கு வருவதுடன் இல்லாமற் போகுமென்பதுடன் பின்னுரிமையார் வெற்றிடமான பதவிக்கு நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(5) இராஜினாமா செய்த அல்லது விலக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலத்தில் எஞ்சியுள்ள காலப் பகுதிக்கு அமைச்சரினால் இந்த நியதிச்சட்டத்தின் 23 (1) (உ) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவரை நியமிக்கலாம்.

(6) இராஜினாமா செய்தமையினால் அல்லது விலக்கப்பட்டமையினால் உருவாகும் வெற்றிடமொன்றுக்கு மீள நியமிக்கும் உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலமானது முன்னர் பதவி வகித்தவரின் பதவிக் காலத்தில் எஞ்சிய பகுதிக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(7) அமைச்சரினால் நிதியத்தின் முகாமைத்துவ சபைக்கு ஒரு தடவை நியமிக்கப்பட்ட ஒருவரை மீள நியமிப்பதற்கு தடையேதும் இல்லை.

24. முகாமைத்துவ சபைக்கு இந்த நியதிச்சட்டத்தின் 23 (1) (உ) ஆம் உப பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட

(1) உறுப்பினர் ஒருவரினால் அமைச்சருக்கு சமர்ப்பிக்கும் எழுத்து மூல கோரிக்கையின் மூலம் உறுப்பாண்மையிலிருந்து இராஜினாமா செய்வதற்கான வாய்ப்புள்ளது.

(2) உறுப்பினர் ஒருவர் ஏதேனும் நீதிமன்றம் ஒன்றில் குற்றவியல் குற்றமொன்றுக்கு குற்றவாளியென தெரியவந்தால் அல்லது ஏதேனும் முறைக்கேடான நடவடிக்கையொன்றுக்கு குற்றவாளியென தெரியவந்தால் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் குறித்த ஆளை உறுப்பாண்மையிலிருந்து விலக்குதல் வேண்டும்.

(3) உறுப்பினர் ஒருவரின் சேவை தொடர்பில் அமைச்சரானவர் திருப்தியுறாத சந்தர்ப்பத்தில் அமைச்சரின் தற்றுணியின் பேரில் உறுப்பாண்மையிலிருந்து நீக்கலாம்.

25. (1) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவராக அல்லது உள்ளூராட்சி உறுப்பினர் ஒருவராக பதவி வகிக்கும் ஒருவர்;

(2) மனநிலை குன்றிய ஒருவராக அல்லது வங்குரோத்து நிலையை அடைந்த ஒருவராக அல்லது குற்றவியல் குற்றமொன்றுக்கு குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட ஒருவர்;

முகாமைத்துவ சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு தகைமையற்றவராவர்.

26. முகாமைத்துவ சபையின் தத்துவங்களும் பணிகளும் பின்வருமாறாகும்.

(1) நிதியத்தின் நிருவாகம் சம்பந்தமான கொள்கை தீர்மானங்களை எடுத்தல்

(2) நிதியத்தின் பணிகளை முகாமித்தல், கையாளுதல் மற்றும் செயற்படுத்துவதற்குரிய விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குதல்

(3) இந்த நியதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பணிகளையும் நோக்கங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆளுநரினால் விதித்துரைக்கப்படும் வரையறைக்குள் இந்த நிதியத்தின் செலவுகளை ஏற்பதற்கு அங்கீகாரம் வழங்குதல்

(4) நிதியத்தின் கணக்குகளின் முகாமைத்துவம் தொடர்பில் ஆண்டறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றையும் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல்.

27. (1) நிதியத்தின் முகாமைத்துவ சபை ஆகக்குறைந்தது மூன்று (03) மாதங்களுக்கு ஒரு தடவை கூடுதல் வேண்டும்.

(2) கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்று பேர்களாவர்.

(3) முகாமைத்துவ சபை உறுப்பினர்களிடையே வெற்றிடம் நிலவுவது முகாமைத்துவ சபையின் கூட்டங்களுக்கு தடையாக இருத்தலாகாது.

(4) கூட்டத்தில் கலந்து கொள்ளும் முகாமைத்துவ சபையின் உறுப்பினர்களுக்கு அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் படியொன்றை ஆளுநரின் அங்கீகாரத்தின் மீது செலுத்தப்படலாம்.

## பாகம் IV

### பொது ஏற்பாடுகள்

28. இந்த நியதிச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் குற்றமொன்று புரியப்பட்ட சந்தர்ப்பத்தில் வழக்குத்தாக்கல் செய்யும் அதிகாரம் ஆணையாளருக்கு அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு உரியதாகும்.

29. (1) இந்த நியத்ச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரானவரினால் கட்டளைகள் ஆக்கப்படலாம்

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 30 நாட்கள் கடந்ததன் பின்னர் உடனடியாக மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(3) மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளையொன்று குறித்த கட்டளைகளின் கீழ் முன்னர் புரிந்த நடவடிக்கையொன்றுக்கு பாதிப்பேற்படாதவாறு இல்லாதொழிக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் கட்டளையொன்று இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

பாகம் V

**தவறுகளும் தண்டனைகளும்**

30. (1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது இந்த நியதிச்சட்டத்தின் நோக்கத்துக்காக இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் நியதியொன்றின் அல்லது கட்டளையொன்றின் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்படும் ஏனும் அறிக்கையொன்றில் அல்லது வேறு ஆவணமொன்றில் வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பான அல்லது பிழையான வெளிப்படுத்தலொன்றை செய்யும் ஆள் ஒருவர்.

(2) இந்த நியதிச்சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தகவலென்றை அல்லது அறிக்கையொன்றை வழங்கும் தவறும் அல்லது நிராகரிக்கும் ஆள் ஒருவர்.

(3) நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளரின் கட்டளையை அல்லது அறிவித்தலை நியாயமான காரணமின்றி செய்யத் தவறும் ஆள் ஒருவர்,

(4) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையொன்றின் கீழ் அல்லது எவரேனும் ஆள் ஒருவருக்கு கையளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, பணியொன்றை அல்லது கடமையை புரியும்போது அல்லது நிறைவேற்றும்போது அவருக்கு இடையூறு விளைவிக்கும் அல்லது தடையாக இருக்கும் சகலரும்,

(5) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையொன்றை அல்லது ஏற்பாடொன்றை மீறும் அல்லது அதற்கமைவாக செய்லாற்றுவதை வேண்டுமென்றே செய்யாமல் இருக்கும் அத்துடன் /அல்லது இடையூறு விளைவிக்கும் ஆள் ஒருவர்,

இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

31. இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தவறு புரியப்படும் இடத்து வழக்குத் தொடரும் அதிகாரம் நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளருக்கு அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு உரியதாதலும் வேண்டும்.

32. இந்த நியதிச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்று தொடர்பில் தவறிழைக்கின்ற ஆள் எவரும் நீதவான் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்கமுறை வழக்கு விசாரணையின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், பத்தாயிரம் ரூபாவுக்கு குறையாத (ரூபா. 10,000/-) ஒரு இலட்சம் ரூபாவை அதிகரிக்காத (100,000/-) குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு (06) மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு மறியற்தண்டனைக்கு என்னும் இரண்டில் ஏதேனும் ஒரு வகை தண்டனைக்கு அல்லது தண்டனைகள் இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

33. இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்குதல் மற்றும் செலவு செய்தல் சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

பாகம் VI

**பொருள் கோடல்**

*இந்த நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -* பொருள் கோடல்.

"***ஆளுநர்***" *என்னும் போது வடமேல் மாகாணத்தின் ஆளுநர் எனவும்;*

"***அமைச்சர்***" *என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபையின் நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எனவும்;*

"***செயலாளர்***" *என்னும் போது வடமேல் மாகாண மாகாண சபையின் நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் எனவும்;*

'***ஆணையாளர்***" *என்னும்போது இந்த நியதிச்சட்டத்தின் 4(1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாண மாகாண சபையின் நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் ஆணையாளர் எனவும்;*

"***நிதியம்***" *என்னும் போது இந்த நியதிச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியம் எனவும்;*

"***அநாதை***" *என்னும்போது சட்டபூர்வமாக திருமணமான பெற்றோருக்குப் பிறந்த பிள்ளையொன்றாயின் பெற்றோர்கள் இருவரும் மரணமடைந்த அத்துடன் ஒருவர் மரணித்து மற்றவருக்கு பெற்றோர் ஒருவராக செயலாற்ற முடியாத அல்லது சட்டபூர்வமாக திருமணமாகாத தாய்யொருவருக்குப் பிறந்த குழந்தை ஒருவராயின் தாய் மரணமடைந்த அல்லது தாயாக செயற்பட முடியாத ஒருவரின் குழந்தையொன்று எனவும்;*

"***கைவிடப்பட்ட***" *என்னும்போது சட்டபூர்வமாக திருமணமான பெற்றோருக்குப் பிறந்த பிள்ளையொன்று தொடர்பில் பெற்றோர்களினால் கைவிடப்பட்டிருத்தல், ஒருவர் மரணித்து மற்றவர் கைவிட்டிருத்தல் அல்லது பெற்றோர்களாக செயற்படுவதற்கு இயலாமற்போதல், பெற்றோர்களுக்கு தாய் தந்தையாக செயற்படுவதற்கு இயலாமற்போகும் சந்தர்ப்பத்திலும் சட்டபூர்வமாக திருமணமாகாத சந்தர்ப்பத்திலும் தாய் குழந்தையை கைவிட்டிருத்தல் அல்லது தாய்க்கு பெற்றோர்களாக செயலாற்றுவதற்கு இயலாமற்போதல் அல்லது நீதிமன்ற கட்டளையொன்றின் மீது பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் உரிய சட்டரீதியிலான பொறுப்பாளரினால் கைவிடப்பட்ட அத்தகைய சந்தர்ப்பத்திற்கு முகங்கொடுத்த குழந்தையொன்று எனவும்;*

"***அநாதரவு***" *என்னும் போது பொறுப்பு மற்றும் பாதுகாப்பு அத்தியாவசியமான, அரசாங்க திணைக்களத்தின் மூலம் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்படும் பொழுது நிவாரணங்களை பெற்றுக் கொள்ளும் பெற்றோர்கள், பெற்றோரில் ஒருவர் மருத்துவ சான்றிதழுக்கு அமைவாக தொழில் செய்ய முடியாத நிலைக்கு ஆளாகி நோய்வாய்ப்பட்டுள்ள அத்துடன் மற்றவர் (தாய் அல்லது தந்தை அல்லது) நிரந்தர வருமான வழியில்லாத அல்லது பெற்றோரில் ஒருவர் மருத்துவ சான்றிதழின் மீது மனநலம் குன்றிய ஒருவர் என நிர்ணயிக்கப்பட்ட அத்துடன் மற்றவர் (தாய் அல்லது தந்தை அல்லது) நிரந்தர வருமான வழியில்லாத அல்லது வேறு விதத்தில் பெற்றோர்கள் பிரிந்த குடும்பம் ஒன்றின் பிள்ளைகளின் பொறுப்பினை வகிக்கும் தாய் அல்லது தந்தைக்கு நிரந்தர வருமான வழியில்லாத அல்லது வேறு உதவிகள் கிடைத்தாலும் உதவி கிடைக்க வேண்டுமென கிராம அலுவலர் நன்னடத்தை பாதுகாவல் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படும் பெற்றோரின் பிள்ளைகள் எனவும்;*

"***துஷ்பிரயோகம்***" *என்னும்போது -*

*(அ) 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணமும்;*

*(ஆ) 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் சேவையில் ஈடுபடுத்தும் சட்டத்தில் சிறுவர்களை பணிக்கமர்த்துவதற்குரியதான ஏற்பாடுகளும்;*

(இ) சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பற்றிய கட்டளைச் சட்டத்திலுள்ள அத்தகைய ஏற்பாடுகளும்;

(ஈ) 1997 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கட்டாயக் கல்வி கட்டளைகளிலுள்ள ஏற்பாடுகளும்;

"**ஆட்கடத்தல்**" என்னும் போது (15 ஆம் அத்தியாயம்) தண்டனைச் சட்டக் கோவையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு பொருள்படும் எனவும்;

"**நன்னடத்தை பாதுகாவல் உத்தியோகத்தர்**" என்றும் போது 1944 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவாளிகளை நன்னடத்தை காப்புக்கு எடுக்கும் கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவுக்கு அமைவாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் எனவும்;

17(2) ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தன்னார்வ நன்னடத்தை பாதுகாவல் உத்தியோகத்தர் ஒருவர் எனவும்;

"**மாகாண பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்**" என்னும்போது ஐந்து வயதிற்கு குறைந்த அநாதையாக, கைவிடப்பட்ட, அநாதரவான மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களை தங்கவைத்து பேணும் நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் நிறுவனம் எனவும்;

"**சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்**" என்னும்போது அநாதையாக, கைவிடப்பட்ட அநாதரவான மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களை பொறுப்பேற்கும் அத்துடன் அவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கி அவர்களுக்கு பொறுப்பாகவும் பாதுகாப்பையும் வழங்கும் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ அமைப்புகள் நடாத்திச் செல்லப்படும் சகல விதத்திலுமான நிறுவனங்கள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் நீதிமன்றத்தினால் தொடர்புபடுத்தப்படும் அநாதையாக கைவிடப்பட்ட அநாதரவான மற்றும் துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்கள், கர்ப்பிணி பெண் பிள்ளைகள், பருவமடையாத தாய்மார்களை பொறுப்பேற்றல் அவர்களுக்கு தங்குமிட வசதியளித்து அவர்களுக்கு பொறுப்பாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதற்காக தன்னார்வ அமைப்புகளின் மூலம் நடாத்திச் செல்லப்படும் சகல விதத்திலுமான நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தி நிலையங்கள் எனவும்;

"**பகற்பொழுது பராமரிப்பு நிலையங்கள்**" என்னும்போது பெற்றோர்களுக்கு / பொறுப்பானவர் களுக்கு பகற்பொழுதில் பாதுகாப்பினை வழங்க முடியாதுள்ள ஆறு (06) மாதங்களுக்கும் ஐந்து (05) வருடங்களுக்கும் இடைப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பினை வழங்கும் வசதியுடன் கூடிய நிறுவனங்கள் எனவும்;

"**பாதுகாப்பு இல்லங்கள்**" என்னும்போது இந்த நியதிச்சட்டத்தின் 4(10) ஆம் உப பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் எனவும்;

"**சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலை**" என்னும்போது இந்த நியதிச்சட்டத்தின் 4(6) ஆம் உப பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிலையமொன்று எனவும்;

"**18 வயதிற்கு குறைந்த தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கான நிலையம்**" என்னும்போது இந்த நியதிச்சட்டத்தின் 4(11) ஆம் உப பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பாதுகாப்பு நிலையமொன்று எனவும்;

"**சிறுவர்**" என்னும்போது 18 வயதிற்கு மேற்படாத ஆண், பெண் இருபாலர் எனவும்;
பொருள்படும்.

"**நிதி நிறுவனம்**" என்னும்போது 100 சதவீதம் அரசாங்கத்தின் பங்குகளைக் கொண்ட நிதி வைப்புகளை பொறுப்பேற்பதற்கு உரிமப்பத்திரம் பெற்றுள்ள நிறுவனம் எனவும்

"**அரசாங்க வங்கி**" என்னும்போது மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி எனவும்;
பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

35. இந்த நியதிச்சட்டத்தின் சிங்கள தமிழ், ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

02-610

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.